செ.வெ.எண்.**556** நாள்.01.11.2017

**பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் ஏரிகரைகளையோ, ஆற்றின் கரைகளையோ உடைத்து விடும் சமூக விரோதிகளின் மீது கடிமையான நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர், திரு.பா.பொன்னையா, இ,ஆ,ப அவர்கள் எச்சரிக்கை.**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை காரணமாக பொது பணித்துறையின் கட்டுபாட்டில் உள்ள 67 ஏரிகள் நிரம்பி உள்ளன. உபரிநீர் பாதுகாப்பாக பொதுமக்களுக்கு எந்த வித பாதிப்பின்றி வெளியேற்றப்படுகிறது. இதனை பொதுமக்கள் வேடிக்கை பார்பதற்கோ, அதன் அருகிலோ செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறார்கள். மேலும், பொது பணித்துறை அலுவலர்கள் அனைத்து ஏரிகளின் நிலவரம் குறித்து அறிந்து வருகின்றனர். தொடர்ந்து பாதுகாப்பு பணியில் ஈட்டுப்பட்டு வருகின்றனர். ஏரிகளினால் தங்களது பகுதிக்கு உடைப்பு ஏற்பட்டு, பாதிப்பு ஏற்பட்டுவிடும் என கருதி வேறுபகுதிகளுக்கு செல்லும் வகையில் ஏரிகளை சமுக விரோதிகள் யாரேனும் உடைத்து விட்டால் அவர்கள் மீது மிக கடிமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர், திரு.பா.பொன்னையா, இ,ஆ,ப அவர்கள் தனது செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு,

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,

காஞ்சிபுரம்